## DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC 19/2024 (163/2014) |
| Deposition of witness for | Prosecution : LW 8 as PW 6 |
| | Defence : |
| | Court : |
| Name : கார்த்திகேயன் | Father's Name: சாமிவேல் |
| | Husband Name: |
| Village: | Taluk : |
| Caste : | Calling : விவசாயம் |
| Religion: | Age : 46 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23.07.2025

**1 முதல் 6 வரையான எதிரிகள் ஆஜர் இல்லை. மனுவின் பேரில் அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை** :

நான் தற்போது போத்துவா கிராமத்தில் வசித்துவருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 10 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் சுமார் மாலை 5 மணியளவில் வேட்டவலம் போலிசார் பழனியின் வீட்ருகே வந்தார்கள். விசாரணை செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.2** ஆகும். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.3** ஆகும். விசாரணைக்காக கையொப்பம் போட்டேன். என்னை விசாரித்தார்கள் எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னேன். அதன் பின்னர் போலிசார் என்னை எதுவும் விசாரிக்கவில்லை.

**(அரசுத் தரப்பு சாட்சி பிறழ்சாட்சியம் அளித்ததால் சாட்சியினை குறுக்கு விசாணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் அரசுதரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 06.05.2014ம் தேதி மாலை 04.30 மணிக்கு வேட்டவலம் காவல் உதவி ஆய்வாளர் சாமிவேல் வீட்டினிடம் வந்து அவர் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து சண்டை நடந்த இடத்தை பார்வையிட்டு என் முன்பாகவும், சின்னதுரை முன்பாகவும், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் அதற்கு நாங்கள் இருவரும் கையொப்பம் போட்டதாகவும், அதே இடத்தில் வேளிகாத்தான் முள்செடி, தடி ஒன்று இருந்ததாகவும் அதனை சிறப்பு உதவியாளர் திரு. கோவிந்தன் சுமார் மாலை 05 மணியளவில் மேற்படி எங்கள் இருவர் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்ததாகவும், அதற்கு நானும் சின்னதுரையும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது தனக்கே தெரிந்த காரணத்தினால் எதுவும் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்குவிசாரணை</u>**

என்னுடன் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் கையொப்பம் செய்த நபர் என்னுடைய மைத்துனர் என்றால் சரிதான். அ.சா.1 சாமிவேல் என்பவருக்கு மருமகன் என்றால் சரிதான். அ.சா.2 பன்னீர் என்பவர் எனது உடன் பிறந்த அண்ணன் என்றால் சரிதான். அ.சா.3 எனது அண்ணி என்றால் சரிதான். மற்ற பட்டியல் சாட்சி 4, 5,6 ஆகியோர்கள் போத்துவாய் கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எங்கள் மூவரையும் விட பழனிதான் முதலில் பிறந்தவர் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்பட்ட பார்வைமகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில்

உள்ள சங்கதிகள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். படித்து சொன்னார்கள் எனக்கு மூளையில் ஏறவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC 19/2024 (163/2014) |
| Deposition of witness for | Prosecution : LW 5 as PW 5 |
| | Defence : |
| | Court : |
| Name : முருகன் | Father's Name: சுப்பிரமணி |
| | Husband Name: |
| Village: | Taluk : |
| Caste : | Calling : |
| Religion: | Age : 52 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23.07.2025

**1 முதல் 6 வரையான எதிரிகள் ஆஜர் இல்லை. மனுவின் பேரில் அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை** :

நான் தற்போது போத்துவா கிராமத்தில் வசித்துவருகிறேன். நான் முன்னால் ஊராட்சி மன்ற தலைவராக இருந்து தற்போது விவசாயம் செய்து வருகிறேன். நான் ஊராட்சிமன்றத் தலைவராக இருந்தபோது பழனியின் அம்மா என்னிடம் வந்து நிலத்தை அனைத்து பேசி பிரித்துக்கொடு என்று சொன்னார்கள். அதன் பேரில் 2014ம் ஆண்டு சுமார் 10 மணியளவில் பழனியின் வீட்டருகே நானும் எங்கள் ஊரில் உள்ள முக்கியஸ்தர் நபர்கள் 4 பேரும் அங்குவந்து பஞ்சாயத்து பேசியபோது சாமிவேல் தரப்பிலும் பழனி தரப்பையும் அமைதியாக இருங்கள் பேசலாம் என்று நாங்கள் சொல்லிக்கொண்டிருந்த போது பின்னாடி வந்தவர்கள் யாரோ அடித்துவிட்டார்கள் நான் கவனிக்கவில்லை. அதன் பின்னர் பார்த்த போது சாமிவேலுக்கு தலையில் ரத்தமும் மற்றும் சாமிவேலின் மகன் பன்னீருக்கும் தலையின் முன் பகுதியில் ரத்தம் இருந்தது. நான்

அவர்களை மருத்துவமனைக்கு செல்ல சொன்னேன் பின்னர் பேசிக்கொள்ளலாம் என்று நான் சொல்லிவிட்டு அதன் பின்னர் நான் அங்கிருந்து வந்துவீட்டேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது.

**(அரசுத் தரப்பு சாட்சி பிறழ்சாட்சியம் அளித்ததால் சாட்சியினை குறுக்கு விசாணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் அரசுதரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 05.05.2014ம் தேதி காலை 10.30 மணிக்கு அணுகுமலை கிராமம் அ.சா.1 சாமிவேல் வீட்டினிடம் நானும் எனது ஊர்காரர்கள் மற்றும் கன்னபந்தல்காரர்கள் சிலரும் பஞ்சாயத்து பேச வந்தபோது பஞ்சாயத்துக்கு கட்டுப்படாமல் அ.சா.1 சாமிவேலின் இரண்டாவது மனைவி யசோதா அவரது மகன் பழனி, மகள் கவிதா, மருமகன் கன்னப்பந்தல் சரவணன், பழனி மனைவி இந்திரா, சுந்தரம் மனைவி குப்பு ஆகியோர்கள் கும்பலாக வந்து சேர்ந்து சாமிவேலுவைப் பார்த்து பொதுவில் உள்ள சொத்தை நீ எப்படிடா தேவிடியா பையா முதல் பொண்டாட்டி பசங்களுக்கு மட்டும் நிலம் எழுதி வைக்கலாம் என்று அசிங்கமாக திட்டியும், அப்போது பழனி கையில் இருந்த தடியை காம்பாலேயே அடித்து கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டியும், கையில் இருந்த தடியால் ஓங்கி அ.சா.1 சாமிவேலின் தலையின் இடதுபுறம் அடித்து பலத்த ரத்தக்காயத்தை உண்டாக்கியும், இதைத்தடுத்த அவர் மகன் பன்னீர் செல்வம் என்பவரை குப்பு தடியால் வலது முன் நெற்றி, வலது கண் புருவத்தில் அடித்தும், கவிதா கையால் மார்பில் அடித்தும, இந்திரா கையால் முதுகில் அடித்தும், சரவணன் யசோதா இருவரும் தலைமுடியை பிடித்து ஆட்டி துவட்டியும் ரத்தக்காயத்தை உண்டாக்கினார்கள் என்றும், இதைத்தடுத்த அவர் மனைவி அம்பிகாவை கவிதா கோலால் கழுத்தில் அடித்தும், சரவணன் கோலால் தலையில் அடித்தும், குப்பு கையால் முதுகில் அடித்தும் காயப்படுத்தியதாகவும், நானும்

உடன் இருந்தவர்களும் சண்டையை விலக்கியும், காயமடைந்த மூன்று நபர்களையும் சிகிச்சைக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்ததாகவும் அதைப்பொருத்து எதிரியானவர் 06.05.2014ம் தேதி வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்ததாகவும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது ஊர்க்காரர்கள் என்ற முறையில் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்குவிசாரணை</u>**

மேற்படி அ.சா.1 எனக்கு பழக்கமானவர்கள் என்றால் சரிதான். அ.சா.1 சாமிவேல் தரப்பில் யார் யார் இருந்தார்கள் என்றால் சாமிவேல், பன்னீர் செல்வம், அவரது மனைவி மற்றும் சாமிவேலின் மருமகள் இருவர் இருந்தனர். அணுகுமலையைச் சார்ந்தவர்களும் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவயிடம் என்பது பாறைகள் உள்ள பகுதி என்றால் அந்த பாறைகள் மீது தான் நாங்கள் உட்கார்ந்திருந்தோம். அங்கு சண்டை நடந்தபகுதி நல்ல பகுதிதான். இரண்டு தரப்பினருக்கும் நடுவே தள்ளுமுள்ளு ஏற்பட்டது என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்